**விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**அனைத்து விண்ணப்பதாரிகளும் நிகழ்நிலை (Online) ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.**

**01. 2011.03.01ம் திகதியிடப்பட்டு ஆசிரியர்கள் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட 03(01) 2009ம் இலக்க சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.**

1.1 **கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த தற்போது கல்வி அமைச்சு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலையில் பணிபுரிகின்ற க.பொ.த (சா.தர)ப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடு தொடர்பாக அனுபவமுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் இதற்காக விண்ணபிக்க முடியும்.**

(அ) விண்ணப்பிக்கும் பாடத்திற்குரிய பட்டத்தினையோ டிப்ளோமா பயிற்சினையோ பெற்றிருப்பதோடு குறித்த பாடத்திற்கு பொருத்தமான நியமனம் பெற்ற ஆசிரியராயிருத்தல்

(ஆ) க.பொ.த (சாதாரண தரம்) (10,11 ஆம் வகுப்புகளுக்கு) ஆசிரியராக கற்பித்தலில் ஈடுபடல் அல்லது ஆசிரிய ஆலோசகராக க.பொ.த சாதாரண தரத்தில் குறித்த பாடத்துடன் தொடர்புடைய அதிகாரியாக கடமையில் ஈடுபடல்.

1.2 இல 10 ஐப் பூரணப்படுத்தும்போது விண்ணப்பிக்கும் பாடத்திற்கு பொருத்தமான தகுதியினைக் குறிப்பிடுதல் அவசியமாகும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

1.3 விண்ணப்பப்படிவத்தின் 13 ஆம் 14ஆம் பந்திகளைப் பூரணப்படுத்தும்போது "ஆம்" (yes) அல்லது "இல்லை" (No) என்பதனை தெளிவாக அடையாளமிட்டு குறித்துக்காட்டுக. அவ்வாறு குறிக்காத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

* **தற்போது தங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் நடைபெறுமாயின் அல்லது தாங்கள் பரீட்சை கடமைகளில் இருந்து தடைசெய்யப்பட்டிருப்பின் இப்பதவிக்கான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்க முடியாது.**

1.4 **தங்கள் குடும்பத்து உறுப்பினர் ஒருவர் பரீட்சைக்கு தோற்றுவாராயின் அதனை விண்ணப்பத்தில் கண்டிப்பாக குறிப்பிடவும். குடும்ப உறுப்பினர் எனப்படுவோர் - தங்களின் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும், தங்களினதும் துணைவரினதும் சகோதர சகோதரிகளும், அவர்களது பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும் ஆவர்.**

1.5 இரண்டு பாடங்களுக்கு அல்லது இரண்டு மொழிமூலங்களுக்கு விண்ணபித்தல் இரண்டாம் கட்டத்தில் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு ஒரே பாடத்தில் இரண்டு மொழிமூலங்களில் அல்லது கீழ் தொகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பாடங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

| | | |
|---|---|---|
| (21) சிங்கள மொழியும் இலக்கியமும் | (22) தமிழ் மொழியும் இலக்கியமும் | (33) வரலாறு |
| (47) இலக்கிய நயம் சிங்களம் | (48) இலக்கிய நயம் தமிழ் | (61) புவியியல் |
| (64) இரண்டாம் மொழி (சிங்களம்) | (65) இரண்டாம் மொழி (தமிழ்) | (62) குடியியற் கல்வி |
| (31) ஆங்கில மொழி | (72) அரபு | |
| (46) இலக்கிய நயம் ஆங்கிலம் | (49) இலக்கிய நயம் அரபு | |

1.6 **விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலைமுறையில் (online) மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். அரச பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலை முறையில் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு அதனை நிகழ்நிலை முறையில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். இவ்விண்ணப்பப்படிவத்தின் 16 ஆம் பந்தியை தவிர்ந்த ஏனையவற்றை நிகழ்நிலை முறையில் பூர்த்தி செய்தபின் அதன் PDF பிரதியினை பதிவிறக்கம் செய்து ஏனைய உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் அதிபரிடம் / நிறுவனத்தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும். சகல விண்ணப்பதாரிகளினதும் விண்ணப்பப்படிவத்தின் வன்பிரதிகள் மற்றும் புதிய விண்ணப்பதாரிகளின் சான்றிதழ்களின் பிரதிகள் என்பன அதிபர்/ நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும்.**

1.7 மேற்படி பரீட்சையின் மதீப்பீட்டு நிலையங்கள் கீழ்வரும் நகரங்களில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (மதிப்பீடு 14 நாட்கள் வரையில் நடைபெறும்.)

| | | | | |
|---|---|---|---|---|
| **01. கொழும்பு** | **13. கம்பஹா** | **25. காலி** | **37. திருகோணமலை** | **49. அக்கரைப்பற்று** |
| **02. மகரகம** | **14. நிட்டம்புவ** | **26. அக்குரஸ்ஸ** | **38. கேகாலை** | **50. மட்டக்களப்பு** |
| **03. ஹோமாகம** | **15. இரத்தினப்புரி** | **27. மாத்தறை** | **39. பேராதனை** | **51. வவுனியா** |
| **04. பிலியாந்தலை** | **16. பெல்மடுல்ல** | **28. தங்காலை** | **40. கம்பளை** | **52. மன்னார்** |
| **05. மொரட்டுவ** | **17. எமிபிலிபிட்டிய** | **29. அம்பாந்தோட்டை** | **41. கண்டி** | **53. யாழ்ப்பாணம்** |
| **06. ஹங்வெல்ல** | **18. பலாங்கொடை** | **30. குருநாகல்** | **42. மாத்தளை** | **54. நெல்லியடி** |
| **07. அவிசாவலை** | **19. பண்டாரவளை** | **31. நிக்கவரெட்டி** | **43. தெல்தெனிய** | **55. கிளிநொச்சி** |
| **08. ஹொரண** | **20. பதுளை** | **32. குளியாம்பிட்டி** | **44. நுவரெலியா** | **56. புத்தளம்** |
| **09. பாணந்துறை** | **21. வெலிமடை** | **33. சிலாபம்** | **45. ஹட்டன்** | **57. தம்புள்ளை** |
| **10. களுத்துறை** | **22. மஹியங்கனை** | **34. கெக்கிராவ** | **46. மொனராகலை** | **58. வெல்லவாய** |
| **11. மத்துகம** | **23. அம்பலாங்கொடை** | **35. அநுராதபுரம்** | **47. அம்பாறை** | |
| **12. நீர்கொழும்பு** | **24. எல்பிட்டி** | **36. பொலன்னறுவை** | **48. கல்முனை** | |

**குறிப்பு: போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத நகரங்களில் மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவப்படமாட்டாது எனவே இரண்டாவது தெரிவையும் குறிப்பிட வேண்டும்.**

1.8 நியமனமானது தனிப்பட்ட முகவரிக்கு அல்லது அலுவலக முகவரிக்குக் கிட்டிய மதிப்பீட்டு நிலையத்திற்கு வழங்கப்படும். அம்மதிப்பீட்டு நிலையத்தில் குறிப்பிட்ட பாடத்திற்கு மதிப்பீட்டுக் குழுக்கள் அல்லது போதியளவு வெற்றிடங்கள் இல்லாவிடின் வேறு கிட்டிய மதிப்பீட்டு நிலையத்திற்கு வழங்கப்படும்.

**02. விண்ணப்பத்தினை உறுதிப்படுத்தல் :**

ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவம் பாடசாலை அதிபராலும், வலயத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் வலயக்கல்வி பணிப்பாளராலும் கோட்டத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் கோட்டக் கல்வி பணிப்பாளராலும் தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை ஆசிரியர்கள் நிறுவனத் தலைவர் ஊடாகவும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**03. உறுதிப்படுத்தும் அலுவலருக்கான அறிவுறுத்தல்கள் (அதிபர் / நிறுவனத் தலைவர்):**

3.1 இது ஒரு இரகசிய அறிக்கை.

3.2 இப்படிவத்தில் விண்ணப்பதாரியால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையா என்பதைப் பரிசீலிக்கவும்.

3.3 மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியென 3 ஆம் பக்கத்திலுள்ள உரிய இடத்தில் கட்டாயமாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

3.4 மேலே இல. 16 (a) இல் (i) முதல் (iv) வரையான விவரங்களின் கீழ் விண்ணப்பதாரி பற்றிய தங்கள் கணிப்பை உரிய கூடுகளில், பின்வருவனவற்றுள் தகுந்த குறியீட்டால் அடையாளப்படுத்தவும்.

**A** - சிறப்பானது **B** - நன்று **C** - சாதாரணம் **W** - திறமையின்மை

3.5 இது அந்தரங்க அறிக்கையாகும். பதிவிறக்கம் (Downloaded) செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட சகல விண்ணப்பப்படிவங்களையும் உறுதிப்படுத்திய பின் கோவைப்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தனது அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். சகல விண்ணப்பதாரிகளினதும் விண்ணப்பப்படிவங்களை (மூலப் பிரதியை) பட்டியற்படுத்தி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **'விடைத்தாள் பரீட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள், க.பொ.த (சா.தர)ப் பரீட்சை – 2024 (2025)'** எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சகல விண்ணப்பப்படிவங்களையும் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2025.02.13 என்பதை கவனிக்கவும்.**

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
த.பெ.இல - 1503,
கொழும்பு.